# பரணிதழ்

பசுமையும் பாரம்பரியமும் ஒன்று சேர்ந்த
புனித பூமியில், பழங்குடி மக்கள் வாழ்வதே
ஒரு இலக்கியம்!

இயல்
5




பரண் டிரைபல் சொசைட்டி,
கடம்பூர் போஸ்ட், D.G புதூர், சத்யமங்கலம், ஈரோடு – 638 503, செல்: 94432 94979



ஒரு சமூகத்தின் அடித்தளமாகவும், அடையாளமாகவும் இருப்பது அச்சமூகம் சார்ந்த வரலாறு ஆகும். அந்த வரலாறு ஒரே இரவில் எழுதப்பட்டது அல்ல மாறாக, தினமும் நடக்கின்ற அனுபங்களில் எழுத்துப்பதிவே அது. அந்த வகையில், கடந்த கல்வியாண்டில் (2024 – 2025) பரண் டிரைபல் சொசைட்டி மக்களோடு இணைந்து செயல்படுத்திய முன்னெடுப்புகள், பள்ளிச் செல்லும் குழந்தைளின் கனவு மேம்பாட்டிற்காக தீட்டிய திட்டங்களின் பயனாக நடத்தப்பட்ட நிகழ்வுகள் பழங்குடி ஊராளி சமூகத்திற்கான உரிமைகளை நிலைநாட்ட எடுக்கப்பட்ட முயற்சிகள், பெண்கள் மற்றும் இளையோர் மத்தியில் எழுச்சிமிகு மாற்றத்தை உருவாக்க செய்த செயல்பாடுகள் மற்றும் அழிந்துக்கொண்டிருக்கும் பாண்பாட்டுக்கூறுகளை மீட்டுருவாக்கம் செய்ய நடத்திய அனைத்து நிகழ்வுகளையும் தொகுத்து இந்த கல்வியாண்டின் முதல் பரணிதழாக வெளியீடுவதில் பெருமிதம் கொள்கிறேன். இது கடந்த கல்வியாண்டில் எம் பரண் டிரைபல் சொசைட்டி கடந்த வந்த பாதையை திரும்பிப் பார்த்து, இந்த புதிய கல்வியாண்டிற்கான பாதையை ஆய்வு செய்து திட்டமிடுவதற்கு ஏதுவான ஒரு தொகுப்பாகவும், பிற்காலத்தின் காலக் கண்ணாடியாகவும், ஆய்வு திரட்டாகவும் விளங்கும் என்ற நம்பிக்கையோடு இதனை வெளியிடுகின்றேன்.

இந்த பரணிதழிற்கான இந்த ஆண்டறிக்கை அற்புதமாக தயார் செய்த பரண் தோழர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். மேலும், இந்த பரண் மற்றும் எம் பழங்குடி ஊராளி மக்களின் மாண்பிற்காகவும், மேம்பாட்டிற்காகவும் பல முன்னெடுப்புகளை முடுக்கிவிட்ட எம் சென்னை இயேசு சபை மறைமாநில் மேனாள் தலைவர் அருட்பணி. செபமாலை ராசா சே.ச. அவர்களுக்கு எம் இதயம் கனிந்த நன்றி பல. சென்னை இயேசு சபை மறைமாநில புதிய மாநிலத் தலைவராக பொறுப்பேற்றுள்ள அன்புத்தந்தை அருட்பணி. பிரிட்டோ வின்சென்ட் சே.ச. அவர்களை எம் பழங்குடி ஊராளி மக்கள் சார்பாகவும், பரண் டிரைபல் சொசைட்டி சார்பாகவும், அன்போடு வாழ்த்தி வரவேற்கின்றேன். மேலும், இந்த இதழ் இனிதே வெளிவர உதவிய தோழர். அஜய் அவர்களுக்கும், எங்களோடு என்றும் உடனிருந்து உற்சாகப்படுத்தும் அருட்பணி. வசந்த் சே.ச. வளர்ச்சித்திட்ட இயக்குனர், சென்னை இயேசு சபை மறைமாநிலம், அவர்களுக்கு எம் நன்றி. தொடர்ந்து எங்களோடு உடன் பயணிக்கும் இயேசு சபை தோழர்கள், மக்கள் மாமன்ற தோழர்கள், களப்பணியில் உடன் இருக்கும் பணித் தோழர்கள் மற்றும் எம் பழங்குடி ஊராளி மக்கள் அனைவருக்கும் நன்றி பல. தொடர் நம் பணி மக்களின் எழுச்சிகே என்ற நோக்கதோடு இணைந்து செயல்பட வாழ்த்துக்கள்.

*“நம்முடைய முன்னெடுப்புகளை பதிவு செய்வது வெறும் ஆவணத்திற்காக மட்டும் அல்ல மாறாக, அது நீதி செயல்பாடுகளுக்காண ஒரு கருவி, நினைவுகளுக்காண ஒரு சான்று மற்றும் மாற்றத்தை நோக்கி நடத்திச்செல்லும் ஒரு உந்து சக்தி டாக்டர் பீ. ஆர். அம்பேத்கர்”.*








# பரண்

சத்தியமங்கலம் வனப்பகுதியில் 80 கும் மேற்பட்ட கிராமங்களில் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதியில் ஊராளி மற்றும் சோளகர் இனப் பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். சமத்துவம், விடுதலை உணர்வு, இயற்கையோடு இணைந்த அமைதியான வாழ்வு போன்ற உயரிய பண்புகளைக் கொண்ட பண்பாட்டுடன் வாழ்கின்றனர். ஒவ்வொரு நாளையும் வாழ்வையும் அந்தந்த நேரத்திற்கு ஏற்றார்போல் சந்தித்து வாழ்கின்றனர்.

எழுத்தறிவின்மை, ஏழ்மை, ஊட்டச்சத்துகுறைபாடு, நோய்களின் தாக்கம், சமூக அரசியல் பற்றிய விழிப்புணர்வின்மை, வளர்ச்சிக்கான வாய்ப்பின்மை, தங்களுக்கான உரிமைகளை அறியாதிருத்தல், தலைமைத்துவமின்மை, வந்தேரிகளின் அடக்குமுறைகளால் ஒடுக்கப்படுதல், தங்களின் பண்பாட்டை இழத்தல், போன்ற பல சவால்களைச் சந்திக்கின்றனர்.

சுய சார்பு, மாண்பு மற்றும் பன்முக முன்னேற்றம் இவைதான் பழங்குடியினரின் தற்போதைய மிக முக்கியமான தேவைகளாக இருக்கின்றன. இம்மக்களின் வாழ்கையில் பயணித்து முன்னேற்றத்தை முன்னெடுக்க இப்பரண் அமைப்பு 2012 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

## பரணின் அடையாளம்

பரண் அமைப்பானது பழங்குடியினரின் முன்னேற்றத்திற்கான வாழ்வியல் பயிற்றுவிப்பிடம் மற்றும் ஆற்றல் பகிர்தல் மையம் என்ற அடையாளத்தை கொண்டது.

## கனவுத் திட்டம்

சுய சார்புள்ள, நீதி மற்றும் மாண்போடு வாழக்கூடிய பழங்குடி குழுமங்களைக் கட்டியமைத்தல்.



## பணிக்கோட்பாட்டு வரைவுத் திட்டம்

பரண் பழங்குடி மக்களின் பண்பாட்டைக் கண்டுணர்ந்து அரவனைத்துக் காப்பது மற்றும் வளர்ப்பது, பழங்குடியினருக்கான வன உரிமை, மற்றும் நில உரிமையைப் பெற்றுத்தருவது, ஊராளி மற்றும் சோளகர் மற்ற பிற பின்தங்கிய குழுமங்களுக்குக்கான உரிமைகள் மற்றும் அரசு உதவிகள் ஆகியவற்றை கல்வி வழியாகவும் பிற தோழமை அமைப்புகளுடனும் அரசு அமைப்புகளுடனும் இணைந்து பெற்றுத்தருதல்.



## நோக்கம்

- பழங்குடியினருக்கான சங்கங்கள் உருவாக்கி பதிவுசெய்து அதன் தலைவர்களுக்குத் தேவையான பயிற்ச்சியளித்தல்.
- பழங்குடியினரின் பண்பாட்டை ஆவணப்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் பரப்புதல்.
- பழங்குடியினரின் பண்பாட்டுக் கூறுகளை மற்றும் நிகழ்வுகளைக் கட்டியமைத்து அவைகளை நிகழ்த்துதல்.
- மகளிர் சுயஉதவி குழுக்கள் அமைத்து குறு பொருளாதார வாய்ப்புகளைப் பெருக்குதல் பெண்கள் உரிமைகளை பெறவைத்தல்.
- குழந்தைகள் மற்றம் மாணாக்கரின் தலைமைப்பண்பினை வளர்க்கும் அமைப்புகளை உருவாக்குதல்.
- அறிவுசார் வாய்ப்புகளைப் பெருக்கி உரிமைகளைப் பெறுகின்ற வாய்ப்புகளை அதிகப்படுத்துதல்.
- அரசு சாரா அமைப்புகளுடனும் ஒத்த சிந்தனை கொண்ட தோழமைக் குழுக்களுடன் இணைந்து பழங்குயினரின் தேவைகளை ஆய்வு செய்து பணியாற்றுதல்.

## செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள்

### குழந்தைகளின் வளர்ச்சிக்கு

- பள்ளி மற்றும் கல்லூரிகளில் இணைவதற்கு உதவுதல்.
- கல்வி உதவித்தொகை அளித்தல்.
- மாலைநேரங்களில் அறிவாற்றல் மையங்கள் நடத்துதல்.
- அறிவாற்றல் மைய பொறுப்பாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் பயிற்சி தருதல்.
- சுற்றுலா மற்றும் புதிய இடங்களை அறிமுகம் செய்து அனுபவங்களைத் தருதல்.
- கோடைகல்வி மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்துதல்.
- கல்வி மையங்களில் விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஒருங்கிணைத்தல்.
- படிப்பிற்குத் தேவையான பொருட்கள் வழங்குதல்.
- வேலை வாய்ப்பை அதிகரிக்கத் தேவையான வழிகாட்டுதல் அளித்தல்.
- மாணாக்கர் சமூகத்திற்கு பழங்குடியினர் வாழ்வு மற்றும் உரிமைகள் பற்றி சிறப்பு பயிற்ச்சி மற்றும் கருத்தரங்குகள் ஏற்பாடுசெய்தல்.



## பெண்களின் வளர்ச்சிக்கு

- மகளிர் சுய உதவி குழுக்கள் அமைத்து பயிற்சி தருதல்.
- பெண்களுக்கு தலைமைத்துவ பயிற்சி அளித்தல்.
- பெண்களின் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் மற்றும் உரிமைகள் பற்றி கருத்தரங்கங்கள் வழியாக உதவுதல்.
- தொழில் முனைவோருக்கான பயிற்ச்சி அளித்து பெண்களை உயர்த்துதல்.
- பெண்களின் கூடுகைகள்(*Get-together*) ஏற்படுத்துதல்.

## இளையோரின் வளர்ச்சிக்கு



- இளையோருக்கான மன்றங்களை ஏற்படுத்துதல்.
- தலைமைத்துவ பயிற்சி அளித்தல்.
- சமூக நிகழ்வுகளில் பங்கு பெறச்செய்தல் .
- இளையோருடன் உடனிருத்தல்.



## பழங்குடியினரின் பண்பாட்டை வளர்க்க

- தரவுகளை ஆவணப்படுத்தி, பாதுகாத்து, பரப்புதல்.
- பழங்குடியினரின் நடனம், பாடல்கள், கதைகள், வாழ்வின் நிகழ்வுகளை தொடர்ந்து நிகழ்த்திட உடனிருந்து ஊக்கப்படுத்துதல்.
- பழங்குடியினரின் கலாச்சாரத்தை மீட்டெடுக்க கலைவிழாக்கள் மற்றும் கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்துதல்.

## நலவாழ்வுக்கான செயல்பாடுகள்

- கிராமங்களில் நலவாழ்வு மையங்கள் தொடங்கி உதவுதல்.
- மருத்துவ முகாம்கள் நடத்தி தொடர் உதவிகள் செய்தல்.
- நலவாழ்வு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல்.
- குடிநோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தி உதவிகள் செய்தல்.





## வருமானத்தை பெருக்கும் செயல்பாடுகள்

- தொழில் நிருவனங்களுடன் தொடர்புகொண்டு வேலைவாய்ப்பை அதிகரித்தல்.
- அரசு தரும் கடன் மற்றும் மானியங்களை பெற துணைநின்றல்.
- பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உதவிகள் செய்து சுயவேலைவாய்ப்பை அதிகரிக்க துணைநின்றல்.

## உரிமைகள் சார்ந்த செயல்பாடுகள்

- தங்களின் உரிமைகளைப் பெற மக்களை ஒன்றிணைப்பது.
- அரசு தருகின்ற திட்டங்களில் உள்ள நிறை குறைகளையும் அவைகளின் அமலாக்கத்தையும் ஆய்வுகளின் மூலம் எடுத்துரைத்துப் பயன் பெறல்.
- வன உரிமைகள், பெண் உரிமைகள், கல்வி உரிமைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- வீடு பெறுதல், நலவாழ்வு, ஒய்வுதியம், பழங்குடியினரின் சிறப்பு உட்கூறுதிட்டம், வன உரிமை, நில உரிமை, மற்றும் அடிப்படை உரிமைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- பழங்குடியினருக்கு தேவையான அரசு சான்றிதழ்களை பெற்று தருதல்.
- மாநில அளவில் நிகழ்ச்சிகளின் வழியாக ஒத்த சிந்தனையுடையோருடன் இணைந்து பழங்குடியினரின் வாழ்வை வளப்படுத்த பரப்புரை செய்தல்.



## பழங்குடியினரின் தலைமை

- கிராமத்திற்கு ஒரு தலைவர் என்று குழுமத்தலைவர்களை ஏற்படுத்தி அவர்களுக்குப் பயிற்ச்சி அளித்தல்.
- தலைவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து துணைநின்றல்.
- கிராமம் சார்ந்த ஊராளி சங்கங்களை ஏற்படுத்துதல்.



## இதன் அடிப்படையில் பரண் டிரைபல் சொசைட்டியானது, 2024 – 2025 ஆம் ஆண்டுக்கான செயல்பாட்டு அறிக்கையை வெளியிடுவதில் பெருமைகொள்கிறது.

## 1. குழந்தைகளுக்கான நிகழ்வுகள்

### மாலை நேரக் கல்வி மையப் விரிவாக்கப்பயணம்

பரண் அறிவாற்றலாக மையங்களை வலுப்படுத்த மற்றும் மாணவர்களின் கல்வி இடைநிற்றலைத் தவிர்க்க ஆண்டுதோறும் பரண் அமைப்பானது பழங்குடி ஊராளி கிராமங்களில் ஜூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை கள ஆய்வுப் பயணம் மேற்கொண்டு வருகிறது. இந்தப் பயணத்தின் மூலம் 80-க்கும் மேற்பட்ட பழங்குடி ஊராளி கிராமங்களை பார்வையிட்டு மாணவர்களையும், அவர்களின் பெற்றோர்களையும் சந்தித்து கல்வியின் அவசியத்தை எடுத்துக் கூறி மாலைநேர அறிவாற்றலக மையங்களை ஆரம்பிக்க இந்த வரிவாக்க பயணம் உறுதுணையாக இருக்கிறது.



### பள்ளி இடைநின்ற மாணவ மாணவிகள் கணக்கெடுப்பு

கல்வியாண்டின் தொடக்கத்தில், பரண் டிரைபல் சொசைட்டியின் முன்னெடுப்பாக, மலை கிராமங்ளில் வீடு வீடாகச் சென்று, கல்வியின் அவசியம் பற்றியும், அரசு தரும் அனைத்து நலத்திட்டங்கள் பற்றிய புரிதல்களை ஏற்படுத்தி வருகிறது. இந்த ஆண்டும் பரண் தோழர்கள்



அனைவரும் இணைந்து கிராமங்களுக்குச் சென்று கல்வியின் அவசியத்தை பரப்பி மக்கள் மற்றும் மாணவ மாணவிகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும், 10 மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி இடைநின்ற மாணவ மாணவிகளை அடையாளம் கண்டு, அவர்களை மீண்டும் பள்ளிக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், புதியதாக மாலை நேர அறிவாற்றலகம் தொடங்கப்பட்டது.

### பெண் குழந்தைகள் தினவிழா கருத்தரங்கம்

அகில உலக பெண் குழந்தைகள் தினமானது ஒவ்வொரு ஆண்டும் பரண் டிரைபல் சொசைட்டி வளாகத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது. பரண் நடத்தும் மாலை நேர அறிவாற்றல் மையங்களிலிருந்து 101 கும் மேற்பட்ட பெண் குழந்தைகள் மற்றும் மாணவிகளை ஒருங்கிணைத்து அக்டோபர் 5 மற்றும் 6 ஆம் தேதி என இரண்டு நாட்கள் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் பெண் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பெண் குழந்தைகளின் உரிமைகள் பற்றிய சட்டங்களை செல்வி. நிவேதா MSW., LLM, வழக்கறிஞர், உயர்நீதி மன்றம், சென்னை, கருத்துரையாளராக இருந்து

சட்டங்களை பற்றிய விழிப்புணர்வை அளித்தார். இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக அருட்பணி ஜெபமாலை ராசா சே.ச. சென்னை இயேசு சபை மறை மாநில தலைவர் அவர்கள் பங்கேற்று குழந்தைகளை உற்சகப்படுத்தினார்.

## பகுதியளவிலான விளையாட்டுப் போட்டிகள்

மாலை நேரக் அறிவாற்றலகம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்பட்டன. ஆறிவாற்றலக மாணவ மாணவிகள் அனைவரும் பங்கெடுக்கும் விதத்தில் திட்டமிட்டு போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிப்பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்ப்பட்டன. போட்டிகளில் முதல் பரிசு பெற்ற மாணவ மாணவிகள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு பரண் வளாகத்தில் நடைபெறும் குழந்தைகள் தினவிழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

## குழந்தைகள் தினவிழா கொண்டாட்டம்

பரண் டிரைபல் சொசைட்டியின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகள் தின விழாவானது வெகு விமர்சையாக கொண்டாடப்படுகிறது. இவ்வாண்டும் குழந்தைகள் தின விழாவானது நவம்பர் 24 ஆம் தேதி கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் 179 குழந்தைகள் (67 மாணவர்கள் & 112 மாணவிகள்) பங்கேற்றர்கள். இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக திரு. ஹரி ராஜேஷ் கண்ணா, தனுஷ் டெக்ஸ்டைல், திருப்பூர் மற்றும் பழங்குடி ஊராளி மக்கள் சங்க செயலாளர் திருமதி. மசணி அவர்களும் பங்கேற்றார்கள்.



இவ்விழாவில் பரண் மாலை நேர கல்வி மைய மாணவ மாணவிகள் தங்களின் படைப்புகளை கண்காட்சியமைத்து பிறரின் பார்வைக்கு வைத்தார்கள். இக்கண்காட்சியில் இயற்கை பாதுகாப்பு, மற்றும் அறிவியல் சம்பந்தமான ஒரு சில படைப்புக்களை செய்திருந்தார்கள். இந்நிகழ்சி முழுவதும் அறிவாற்றலக மாணவ மாணவிகளால் மட்டுமே ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட்டது. மேலும், காலநிலை மாற்றம் குறித்து அறிவியல் கண்காட்சி, நாடகம், ஓவியம் போன்றவைகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.



## ஜெய்த்துக் காட்டுவோம் வாங்க!

அரசு பொதுத்தேர்வு எழுதும் மாணவ, மாணவிகளுக்கான ஒரு வழிகாட்டி (10வது 11வது மற்றும் 12வது) பயிற்சியானது 2025 ஜனவரி 19ஆம் தேதி அன்று நடைப்பெற்றது. இப்பயிற்சியில் 75 பேர் ( 23 மாணவர்கள் 52 மாணவிகள்) கலந்து கொண்டு பயனடைந்தார்கள். இந்த பயிற்சியானது திருவாளர். தா. ஸ்டீபன் MA.,B.Ed அரசு மேல்நிலைப்பள்ளி, திருநெல்வேலி அவர்கள் சிறப்பாக வழி நடத்தினார். பழங்குடி ஊராளி மாணவ, மாணவியரின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்கவும், அவர்கள் எளிமையான முறையில் மற்றும் மகிழ்ச்சியுடன் தேர்வுகளை சந்திக்கவும் ஜெய்ச்சுக்காட்டுவோம் என்ற தலைப்பில் பயிலரங்கமானது நடைபெற்றது. இப்பயிற்சியில் மகிழ்ச்சியுடன் தேர்வுகளை எதிர் கொள்வது எப்படி? தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுக்கும் வழிமுறைகள் என்ன? தேர்வு பயத்தை போக்கி மகிழ்ச்சியாக தேர்வு எழுதுவது எப்படி? என்ற பயிற்சி பட்டறை மாணவ மாணவியருக்கு மிக்க பயன் அளித்தது. இந்நிகழ்சியின் மூலமாக மாணவ மாணவிகள் தன்னம்பிக்கையோடு, பயமின்ற தேர்வுகளை எதிர்கொள்வதற்கு இப்பயிற்சியானது உதவுகிறது. இந்நிகழ்ச்சியானது தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் பல அனுபவமிக்க பயிற்சியாளர்களைக் கொண்டு

## கோடைக் கல்வி கலைக் கொண்டாட்டம்

பரண் அறிவாற்றலாக குழந்தைகளுக்கான கோடை கல்வி முகமானது கடந்த மூன்று ஆண்டுகாளாக பரண் டிரைபல் சொசைட்டி நடத்தி வருகிறது. இவ்வாண்டும் ஏப்ரல் 26 முதல் மே 7-ஆம் தேதி வரை, 11 நாட்கள் டான் போஸ்கோ விடுதியில் நடைபெற்றது. இம்முகாமில் ஏழு முக்கிய நோக்கங்களை முன் வைத்து நடத்தப்பட்டது, அவைகள் பின்வருமாறு

- ***தங்கும் பழக்கத்தை உருவாக்க***
- ***உறவுகளை வலுப்படுத்த***
- ***தனித் திறமைகளை கண்டறிய***
- ***தன்னம்பிக்கையை வளர்க்க***
- ***பள்ளிக்குச் செல்லும் ஆர்வத்தை தூண்டிட***
- ***போதை விழிப்புணர்வு***
- ***குழந்தை திருமணம்***

இம்முகாமில் 6 பகுதிகளிலிருந்து 4 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பரண் அறிவாற்றலக குழந்தைகள் 130 பேர் (48 ஆண்கள் 82 பெண்கள்) பழங்குடி ஊராளி குழந்தைகள் குறிப்பாக கல்கடம்பூர், குன்றி, காந்திநகர், அரிகியம் கோட்டமாளம், செலுமிதொட்டி, மாக்கம்பாளையம், குரும்பூர், அட்டணை, எக்கத்தூர், போகிபாளையயம், கிளாத்தூர், சோளத்தூர், பாலபடுகை, மு.பாளையம் மற்றும் மலையனூர் போன்ற கிராமங்களிலிருந்து பங்கேற்றர்கள். முகாமில் கலந்துகொண்ட மாணவ, மாணவிகளுக்கு கீழ்க்காணும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டது.

- ***அபாகஸ் மற்றும் விளையாட்டு கணக்கியல்***
- ***பென்சில் ஒவியம் பயிற்சி மற்றும் கைவிvனை பொருட்கள் பயிற்சி***
- ***கலைவழி ஆங்கிலம் கற்றலின் இனிமை பயிற்சி***
- ***அலைபாயும் மனநிலையை சீர் செய்யும் கலைவழிப் பயிற்சி***
- ***வாழும் கலைப் பயிற்சி***
- ***குழந்தைகள் பாராளுமன்றம்***
- ***கணிதம் மற்றும் அறிவியல் – கலைவழி பயிற்சி***
- ***நாட்டுப்புற கலைப் பயிற்சி – வீதி நாடகப் பயிற்சி***

மேலும், பல்வேறு விதமான தலைமைத்துவ பயிற்சிகளும் விளையாட்டு முறையில் சொல்லிக்கொடுக்கப்பட்டது. இம்முகாமின் மூலமாக ஏறக்குறைய பல மாணவ மாணவிகள் விடுதிகளில் தங்கி படிக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கி இருக்கிறது. பலர் பள்ளி விடுதிகளிலும், கல்லூரி விடுதிகளிலும் தங்கி பயின்று வருவது இம்முகாமின் பெரிய வெற்றியாகும். இம்முகாமின் விளைவாக மாணவ மாணவிகள் தங்களின் தனித்திறமைகளை அடையாளம் காணவும் அவற்றை வலுப்படுத்தவும் முனைகிறார்கள். சிறப்பாக, தன்னம்பிக்கையில் அதிகம் வளர்ந்திருக்கிறார்கள்.




## கடம்பூர் வனச்சரக அதிகாரிகளுடன் பயணம்

பரண் டிரைபல் சொசைட்டியானது கடம்பூர் வனச்சரக அலுவலகத்தோடு இணைந்து ஜூன் மாதம் 5 ஆம் தேதி உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பரண் மாலை நேர கல்வி மையக் குழந்தைகள், பரண் அமைப்பினர் மற்றும் வனச்சரக அலுவலர் திரு. புவியரசன் மற்றும் வனச் சரக அலுவலர்கள் அனைவரும் சேர்ந்து கல்கடம்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மரக்கன்றுகள் நட்டும் மற்றும் நெகிழிகளை அகற்றியும் இந்நாளின் முக்கியத்துவத்தை பிரகடனப்படுத்தினார்கள்.

மேலும், அக்டோபர் 4-ஆம் தேதி உலக வனவிலங்குகள் தினத்தினை முன்னிட்டு பரண் மாலை நேர கல்வி மையக் குழந்தைகளுக்கு குன்றி பகுதியில் உள்ள வனவிலங்குகளின் குடிநீர் தொட்டியை பார்வையிட வனத்துறையினர் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தார்கள். இந்த நிகழ்ச்சியில், வனவிலங்குகளின் பாதுகாப்பு, காடுகளின் பாதுகாப்பு, காடுகளின் தேவை போன்ற விழிப்புணர்வை குழந்தைகள் மத்தியில் வனத்துறையினர் ஏற்படுத்தினார்கள்.



## 2. கலைக் குழு விழிப்புணர்வு பயணங்கள்

### கலைக்குழு பயிற்சி

அறிவாற்றலக மாணவ மாணவிகளைக் கொண்டு இந்த பரண் கலைக்குழுவானது தொடங்கப்பட்டது. இக்குழுவில், 8 ஆம் வகுப்பிலிருந்து 11 ஆம் வகுப்பு வரையுள்ள மாணவ மாணவிகள் பங்கெடுக்கிறார்கள். கோடை முகாமில் இவர்களை அடையாளப்படுத்தி இவர்களுக்கு சிறப்புப் பயிற்சியளிக்கப்படுகிறது. மேலும், ஆண்டிற்கு 4 பயிற்சிகள் வழங்கப்படுகிறது. இப்பயிற்சியில்.

- *வீதி நாடகப்பயிற்சி*
- *நாட்டுப்புற நடனங்கள்*
- *ஊராளி பாரம்பரிய பாடல்கள் மற்றும் ஆடல்கள்*
- *சிறார் திருமணங்கள் பற்றிய விழிப்புணர்வுகள்*
- *குடியினால் ஏற்படும் தீமைகள்*
- *இயற்கை பாதுகாப்பு*

போன்ற பல மையக்கருத்துகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.



### கலைக்குழுவின் கலைப்பயணம்

கலைக்குழு உறுப்பினர்கள் அனைவரும் மாதத்திற்கு இரண்டு நாள் பரண் மையத்திற்கு வந்து பயிற்சி எடுக்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் நான்கு கிராமங்களில் கலை நிகழ்சிகளை நிகழ்த்துகிறார்கள். தங்களின் கலைநிகழ்ச்சி மூலமாக பல ஊர்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார்கள். மேலும், கலைநிகழ்சிகளின் போது, நலவாழ்வு, அரசின் நலத்திட்டங்கள் மற்றும் பழங்குடி ஊராளி மக்கள் சங்கத்றன் தேவை பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்துகிறார்கள். பரண் கலைக்குழுவிற்கு மக்கள் மத்தியில் அதிக வரவேற்பு இருக்கிறது.

## 3. பெண்கள் மேம்பாட்டு நிகழ்வுகள்

பழங்குடி ஊராளி பெண்களின் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் பரண் டிரைபல் சொசைட்டியானது பெண்களின் வளர்ச்சிக்காக அனைத்து பழங்குடி ஊராளி கிராமங்களிலும் 55-க்கும் மேற்பட்ட பழங்குடி ஊராளி மகளிர் சுய உதவிக் குழுக்களை தொடங்கி வழி நடத்தி வருகின்றது. இக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருவதால் மகளிர் குழுக்களுக்கான வங்கி கடன் இவ்வாண்டில் 93 லட்சம் வெற்றிகரமாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தொகையை குழு பெண்கள் தங்களின் குழந்தைகளின் கல்விக்காகவும்,; அடிப்படை தேவையான வீடுகள் கட்டவும், மற்றும் விவசாயத்திற்கும் பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்குழுப் பெண்களுக்கு மாதம் தோறும் பரண் மையத்தில் வழிகாட்டுதல் பயிற்சிகள், தொழில் முனைவோருக்கான பயிற்சிகள் மற்றும் தலைமைத்துவ பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகிறது. பழங்குடி ஊராளி பெண்களில் குறிப்பாக விதவைப் பெண்களுக்கு அரசு நலத் திட்டம் பற்றிய விழிப்புணர்வும், தன்னம்பிக்கையோடு வாழ பயிற்சியளிக்கப்படுகிறது.



## தொழில் முனைவோர் பயிற்சி கூட்டம்

பழங்குடி ஊராளி மகளிர் சுய உதவிக் குழு பெண்களுக்கு இவ்வாண்டில் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் தொழில் முனைவோர் பயிற்சி கூட்டம் இரண்டு கட்டமாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் 50க்கும் மேற்பட்ட பழங்குடி ஊராளி மகளிர் சுய உதவிக் குழுக்களின் குழுத் தலைவர்கள் பயிற்சியில் கலந்து கொண்டு சிறப்பாக பயிற்சி பெற்றனர். இப்ப பயிற்சியின் மூலம் முதற்கட்டமாக, கரளயம் கிராமத்தில் உள்ள கிண்டி செம்பு பழங்குடி ஊராளி மகளிர் சுய உதவிக் குழு மற்றும் மயில் தோகை பழங்குடி ஊராளி மகளிர் சுய உதவிக் குழுப் பெண்கள் சேர்ந்து (ரடைட ஞரநநஎள கயளாழைர) தையலகம் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மகளிர் தின விழா

அகில உலக பெண்கள் தினமான மார்ச் 8 அன்று பழங்குடி ஊராளி பெண்கள் தினமாக பரண் டிரைபல் சொசைட்டி அனுசரித்து வருகிறது. இவ்வாண்டு, ஏறக்குறைய 900 மேற்பட்ட பெண்கள் ஒருங்கிணைந்து இவ்விழாவினை கொண்டாடினார்கள். இவ்விழாவிற்கு, சிறப்பு விருந்தினர்களாக சென்னை மறைமாநில வளர்ச்சி திட்ட இயக்குநர் அருட்பணி. வசந்த் சே.ச, ஞுமுர்மு நிறுவனத்தின் மேளாலர் திரு. ராகுல் மற்றும் பழங்குடி ஊராளி மக்கள் சங்க தலைவர்கள் பங்கேற்றார்கள். இந்நிகழ்ச்சியில், ஊராளிகளின் பாரம்பரிய நடனம் மற்றும் குழுப்பெண்களின் கலைநிகழ்சிகள் நடைபெற்றது.



## தொழில் முனைவோர்காண சந்திப்புப் பயணம்

நாகப்பட்டனத்தில் மிகச் சிறப்பாக இயங்கும் கலங்கரை தொண்டு நிறுவன நிகழ்வுகளைப் பார்வையிடவும், அங்குள்ள விதவை மற்றும் கைம்பெண்கள் சுயமாக செய்யும் தொழில்களை பார்வையிட்டு அவர்களோடு கலந்துரையாடவும் இப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில், 25 பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மார்ச் 24 மற்றும் 25 ஆம் தேதி நாகப்பட்டினம் சென்றார்கள். கலங்கரை மையத்தில் அருட்பணி. குழந்தை சே.ச. அருட்பணி. பிரான்சிஸ் சேவியர் சே.ச மற்றும் இளவல். கிஷோர் கலங்கரைப் பற்றியும், கைம்பெண்கள் சுய சார்பு குழக்களைப்பற்றியும் அறிமுகப்படுத்தினார்கள்.



சங்கத்தலைவிகள் அவர்களின் வெற்றிக்கதைகளையும், எதிர்கொண்ட சவால்களையும் பகிர்ந்துக் கொண்டார்கள். மேலும், இரண்டு கிராமங்களுக்கு சென்று குழுப் பெண்களோடு கலந்துரையாடி அவர்கள் செய்துவரும் சிறு மற்றும் குறு தொழில்களை பார்வையிட்டார்கள். இந்த அனுபவங்கள் தங்களுக்கு ஒரு பெரும் உந்துசக்தியான இருப்பதாக பங்கெடுத்தவர்கள் பகிர்ந்துக்கொண்டார்கள்.

## பழங்குடி இளையோர்காண முன்னெடுப்புகள்

பழங்குடி ஊராளி இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அவர்களை ஆற்றல்படுத்தவும் பரண் பல முன்னெடுப்புகளை தொடர்ந்து எடுத்து வருகிறது. இம்மலைப்பகுதிகளில் பெரும் சவாலாக இருப்பது போதை. பெரும்பாண்மையான இளைஞர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி குடி நோயாளிகளாக இருக்கிறார்கள். எனவே, இவர்களின் கவனத்தைத் திசைத்திருப்ப ஒவ்வொரு ஆண்டும் போதையில்லா கடம்பூர் என்ற மையக் கருத்தை வைத்து இந்த (MAGIS) போதை விழிப்புணர்வு கைப்பந்து போட்டி நடைபெறுகிறது.

இவ்வாண்டு ஜனவரி மாதம் 24 மற்றும் 25 ஆம் தேதிகளில் போதை விழிப்புணர்வு கைப்பந்து போட்டிகள் டான் போஸ்கோ வளாகத்தில் நடைபெற்றது. இந்த கைப்பந்து போட்டியில் 24 அணிகளும் 250 ற்கு மேற்பட்ட இளைஞர்களும் பங்கேற்றனர். சிறப்பு விருந்தினர்களாக கடம்பூர் காவல் நிலையம் துணை காவல் உதவி ஆய்வாளர், திரு.ராமசாமி பழங்குடி மக்கள் சங்கம் மற்றும் ஊராளி மக்கள் சங்க தலைவர்கள், டான் போஸ்கோ விடுதியின் தந்தையர்கள், மற்றும் திரு. திருஞானசம்மந்தம், மேலாளர், (State Bank) கடம்பூர் ஆகியோர் பங்கேற்றனர்கள். இப்போட்டியில் நடுவராக செல்வன்.கபிலன் அவர்கள் செயல்பட்டார், இவருடன் இணைந்து பரண் பணியாளர்கள் இப்போட்டியை சிறப்பாக வழி நடத்தினர்கள்.

## கல்லூரி மாணவ மாணவிகள் தொடர் உடனிருப்பு

பரண் டிரைபல் சொசைட்டி பழங்குடி ஊராளி மாணவ மாணவிகளை உயர் கல்வி பெற பல முன்னெடுப்புகளை தொடர்ந்து செய்து வருகிறது. இந்த ஆண்டு ஏறக்குறைய 45 க்கும் மேற்பட்ட மாணவ மாணவியரை உயர்கல்வி கற்க சென்னை லொயோலா, மெட்டாலா, சங்ககிரி, மருத்துவம் மற்றும் சட்டக்கல்லூரிகளில் படிக்கவும், தொடர்ந்து படிக்க பொருளாதார ரீதியாக உடன் பயணித்து வருகிறார்கள். ஒவ்வொரு மாதமும், கல்லூயில் படிக்கும் மாணவ மாணவியரின் பெற்றோர்களுக்கு கூட்டம் நடத்தப்படுகிறது. மாணவ மாணவியர்களுக்கும் விடுமுறை நாட்களில் பல பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

| S. No | Name of the Students | Name of the Institutions | Department |
|---|---|---|---|
| 1. | Ranga Samy | Loyola College, Chennai | B. A ( Tamil ) – III Year (Sports) |
| 2. | Murugan | Loyola College, Chennai | B. A ( Tamil ) – III Year |
| 3. | Neelavathi M | Loyola College, Mettala | B. SC Chemistry – III Year |
| 4. | Kalaivani P | Loyola College, Mettala | BCA – III Year |
| 5. | Amburose G | Loyola College, Mettala | BCA – III Year |
| 6. | Anushya V | Loyola College, Mettala | B. Com – III Year |
| 7. | Lourdhu Joice A | Loyola College, Mettala | B. Com – III Year |
| 8. | Vetri M | Loyola College, Mettala | B. A (English) – III Year |
| 9. | Puspaveni | Loyola College, Mettala | B. A (English) – III Year |
| 10. | Maragatham M | Loyola College, Mettala | B. A (English) – III Year |
| 11. | Louthu Peter S | Loyola College, Mettala | B. Com (Account/ Fin) – III Year |
| 12. | Manoj A | Loyola College, Mettala | B. Com (Account/ Fin) – III Year |
| 13. | Maheshwari S | Loyola College, Mettala | BCA – III Year |
| 14. | Sivaranjani C | Loyola College, Mettala | B.Sc. (Chemistry) – III Year |
| 15. | Kiruthika K | Loyola College, Mettala | B.Sc. (Chemistry) – I Year |
| 16 | Maheshwari | Madras Law College, Chennai | LLB., IV Year |
| 17. | Sanjay | Loyola College, Chennai | Digital Journalism – II Year |
| 18. | Kaviya | Government Medical College, Sivagangai | MBBS – II Year |
| 19. | Nandhini | Bon Succours Women's College, Sangagiri | B.Sc Computer Science – II Year |
| 20. | Muniyamma | Bon Succours Women's College, Sangagiri | B.Sc Computer Science – II Year |
| 21. | Manju | Bon Succours Women's College, Sangagiri | Fashion Designing – II Year |
| 22. | Adhi Lakshmi | Bon Succours Women's College, Sangagiri | B.com – I Year |
| 23. | Tamilarazi | Bon Succours Women's College, Sangagiri | B.com – I Year |
| 24. | Dharishni | Bon Succours Women's College, Sangagiri | B.com – I Year |
| 25. | Eniga | Bon Succours Women's College, Sangagiri | Fashion Designing – I Year |
| 26. | Mythili | Bon Succours Women's College, Sangagiri | BCA – I Year |
| 27. | Abiniya | Bon Succours Women's College, Sangagiri | Bio -Technology – I Year |
| 28. | Venila | Nirmala Women's College, Coimbatore | B.A English – I Year |
| 29. | Radha mery | Nirmala Women's College, Coimbatore | B.Sc Chemistry – I Year |
| 30. | Harish | Loyola College, Vettavalam | B.Sc Physical Education – I Year |
| 31. | Sumithra | Nirmala Women's College, Coimbatore | B.A, Economics – I Year |
| 32. | Sandhiya | Nirmala Women's College, Coimbatore | B.A, Economics – I Year |

## ஊராளி மக்கள் கிளை சங்கம் தொடங்குதல்

சிதறிக்கிடக்கும் பழங்குடி ஊராளி மக்களை ஒரே குடையின் கீழ் கொண்டுவரவும், அவர்களின் உரிமைக்கான மற்றும் வாழ்வுக்காண தேடலை கூட்டாக ஆற்றல்படுத்தவும் "பழங்குடி ஊராளி மக்கள் சங்கம் உருவாக்கப்பட்டது. இதற்கு வலுசேர்க்கும் விதமாக இந்த ஆண்டில் கல்கடம்பூர், அத்தியூர் கேர்மாளம், அட்டணை, கிணத்து தொட்டி, மாமர தொட்டி, கரளயம் மற்றும் கானக்குந்தூர் ஆகிய கிராமங்களில் கிளைச் சங்கங்கள் வெற்றிகரமாக நிறுவப்பட்டது. கிளைச்சங்களில் கூட்டு முயற்சிக்கு கிடைக்கும் வெற்றியையும், அதன் மாபெரும் ஆற்றல்களையும் எடுத்துக்கூறி கிளைச் சங்கங்கள் சிறப்பாக செயலாற்ற ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## சமூகத் தலைவர்களுக்கான பயிற்சி கூட்டம்

சமூகத்தின் மீது அக்கரைக் கொண்ட நல்ல பழங்குடி தலைவர்களை உருவாக்கவும், பழங்குடி மக்களை ஒருங்கிணைக்கவும், அடையாளப்படுத்தவும் கிளைச் சங்கங்கள் கட்டி எழுப்பப்படுகிறது. இவற்றின் தலைவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் பயிற்சியளிக்கப்பட்டு அவர்களை தகுதியாக்கும் முயற்சியில் பரண் ஈடுபட்டு வருகிறது.



## அரசு உயர் அதிகாரிகளை சந்தித்தல்

ஜூன் 25 அன்று பழங்குடி ஊராளி மக்கள் சங்க தலைவர்கள் மற்றும் பரண் அமைப்பினர் இணைந்து தமிழ்நாடு பழங்குடி நலத்துறை இயக்குனர் மதிப்பிற்குரிய அண்ணாதுரை அவர்களை சென்னையில் உள்ள அவரின் அலுவலகத்தில் சந்தித்தனர். இந்த அமர்வில் பழங்குடி ஊராளி மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்கு தேவையான அடிப்படை உரிமைகள் மற்றும் தேவைகள் நேரடியாக மக்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டி வேண்டுகோள் வைக்கப்பட்டது. உறுப்பினர்கள் அனைவரும் தமிழக சட்டமன்ற நடவடிக்கைகளை பார்வையிடக்கூடிய வாய்ப்பும் பெற்றார்கள். இந்த ஆண்டு முழுவதுமாக அரசு உயர் அதிகாரிகளைச் சந்தித்து தங்களின் சமூக மக்களுக்கான உரிமைகளை நிலைநாட்ட தொடர் சந்திப்புகளை செய்து வருகின்றனர்.



## அகில உலக பழங்குடியினர் தினம்

ஆகஸ்ட் 9 அன்று அகில உலக பழங்குடியினர் தினமானது ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில் குத்தியாலத்தூர் கூத்தம்பாளையம் குன்றி திங்களூர் பஞ்சாயத்துகளில் வசிக்கும் பழங்குடி ஊராளி மக்கள் சுமார் 800 பேர் பங்கேற்றார்கள். இந்நிகழ்வின் நோக்கமாக போதைப் பொருள் இல்லா கடம்பூர் வனப்பகுதியை உருவாக்குவதே ஆகும். இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக இயேசு சபை சென்னை மறை மநிலத்தின் வளர்ச்சி திட்ட இயக்குனர் அருட்பணி வசந்த் சே.ச. அவர்களும், ஈரோடு மாவட்ட தாட்கோ மேலாளர் திரு. அர்ஜுன் அவர்களும் ஊராளி மக்கள் சங்க தலைவர் திரு. வேல் முருகன் அவர்களும் பங்கேற்றார்கள். இவ்விழாவின் மூலம் கடம்பூர் மலைகளிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் பழங்குடியினரின் வளமான பண்பாடு மற்றும் பாரம்பரிய மதிப்புகள் உலகத்தினருக்கு வெளியிடப்பட்டது. பழங்குடி மக்களின் வாழ்வியல் களஞ்சியம் அழிக்கப்பட்ட மற்றும் மறைக்கப்பட்ட பழங்குடி மதிப்புகள் மற்றும் பண்பாட்டினை மீட்டெடுப்பது பற்றி இளைய சமூகத்தினரிடம் வலியுறுத்தப்பட்டது.



## அரசியலமைப்பு சாசன நிர்ணய தினம்

இவ்வாண்டில் சிறப்பாக இந்திய அரசியலமைப்பு நாளான நவம்பர் 26 அன்று பரண் மையத்தில் அரசியலமைப்பு சாசன நிர்ணய தினம் கொண்டாடப்பட்டது. இந்நாளில் மக்கள் மாமன்ற மாநில பியிற்சியாளர் திரு. அம்ரோஸ் அவர்கள,; பரண் தோழர்கள்; மற்றும் பழங்குடி ஊராளி இளைஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் இந்திய அரசியலமைப்பு மற்றும் அதன் அடிப்படை மதிப்பீடுகளான, நீதி, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம், இறையாண்மை, சமதர்மம், மக்களாட்சி, குடியரசு, மாண்பு, ஜனநாயகம், ஒருமைப்பாடு மற்றும் பன்மைத்துவம் போன்றவற்றைப் பற்றி இந்நாளில் விளக்கமாக பேசப்பட்டது. இதன் மூலம் அனைவரும் வேற்றுமையில் ஒற்றுமை என்ற விழுமியத்தோடு வாழ அழைப்புவிடுக்கப்பட்டது.

## கிராம சபை கூட்டம்

பழங்குடி ஊராளி மக்களின் உரிமைகளையும் தேவைகளையும் கேட்க கிராம சபா கூட்டம் மிக முக்கியமான ஒன்றாக பார்க்கப்படுகிறது. எனவே கிராம சபைக் கூட்டத்தில் பழங்குடி ஊராளி கிராமங்களில் வசிக்கும் மக்களை பங்கேற்க பல்வேறு விதமான பயிற்சிகள் பரண் டிரைபல் சொசைட்டி மூலம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாக குத்தியலத்தூர், கூத்தம்பாளையம், குன்றி மற்றும் திங்களூர் பஞ்சாயத்துகளின் நடைபெறும் கிராம சபா கூட்டங்களில் பழங்குடி ஊராளி மக்களை பங்கேற்க வைத்து தங்களின் உரிமைகளையும் தேவைகளையும் பெற முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக ஜனவரி 26 குடியரசு தினம், மார்ச் 22 உலக நீர் தினம், மே 1 தொழிலாளர் தினம், ஆகஸ்ட் 15 சுதந்திர தினம், அக்டோபர் 2 காந்தி ஜெயந்தி மற்றும் சிறப்பு கிராம சபா கூட்டங்கள் அனைத்திலும் பழங்குடி ஊராளி மக்கள் சங்க தலைவர்கள், பழங்குடி ஊராளி மகளிர் சுய உதவிக் குழு பெண்கள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரை பங்கேற்க வைக்கப்படுகிறது. இதன்மூலம் மக்கள் தங்களின் தேவைகளையும், உரிமைகளையும் பெற உறுதுணையாக இருக்கிறது.

## தேர்தல் விழிப்புணர்வு

நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலை ஒட்டி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆணைக்கிணங்க சத்தியமங்கலம் வட்டம் கடம்பூர் மலைப்பகுதியில் உள்ள மலை கிராமங்களில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியானது வருவாய் வட்டாட்சியர் மற்றும் கடம்பூர் கிராம நிர்வாக அலுவலர், நில வருவாய் ஆய்வாளர் ஆகியோருடன் இணைந்து பரண் அமைப்பானது தேர்தல் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தினார்கள். குறிப்பாக பழங்குடி ஊராளி மக்களுக்கு ஆழமாக விழிப்புணர்வுகள் கொடுக்கப்பட்டது.

## சமத்துவ பொங்கல்

ஜனவரி 25 அன்று டான்போஸ்கோ வளாகத்தில் பரண் டிரைபல் சொசைட்டியின் சார்பாக சமத்துவ பொங்கல் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில், பசுவண்ணா சுவாமிகள், கேர்மாளம், தமுகமது இலியாஸ், சத்தியமங்கலம், அருட்பணி. ஸ்டைலோ, டான் போஸ்கோ விடுதி, திரு. கந்தசாமி, துணை காவல் உதவி ஆய்வாளர் மற்றும் திரு. திருஞனசம்மந்தம், வங்கி மேளாலர், கடம்பூர் சிறப்பு அழைப்பாளர்களாக வருகை புரிந்து விழாவில் பங்கேற்றார்கள். மேலும் பழங்குடி ஊராளி மக்கள் சங்கம் பழங்குடி ஊராளி மகளிர் சுய உதவி குழுப் பெண்கள் மாலை நேர கல்வி மைய ஆசிரியர்கள் மற்றும் கடம்பூர் மலை கிராமங்களில் இருந்து கைப்பந்து போட்டிக்கு வருகை புரிந்திருந்த இளைஞர்கள் உட்பட 300-க்கும் மேற்ப்பட்டோர் கலந்து கொண்டு விழாவின் நோக்கத்தினை மிக ஆழமாக உள்வாங்கிச் சென்றார்கள்.



## மண்மணம், லொயோலா கல்லூரி, சென்னை

லொயோலா கல்லூரி நடத்துகின்ற மண்மணம் நிகழ்ச்சியில் எம் மக்களின் பாரம்பரியத்தை பரைசாற்றும் விதத்தில் ஜனவரி 3 ஆம் தேதி நடைபெற்ற மண்மணம் நிகழ்ச்சியில் பழங்குடி ஊராளி மக்கள் சார்பாக கரளியம் பெண்கள் பங்கெடுத்தனர். இந்நிகழ்சியின் மூலமாக ஊராளி மக்களின் வாழ்வு மற்றும் பண்பாட்டினை கல்லூரி மாணவ மாணவிகள் மத்தியில் சில நெருடல்களையும், அதிர்வலைகளையும் உருவாக்கினார்கள்.

## அடிப்படை ஆவணங்கள்

பரண் டிரைபல் சொசைட்டியானது பழங்குடி ஊராளி மக்களின் அடிப்படை தேவைகளான வீட்டுமனை பட்டா, நில பட்டா, வீட்டு மனை போன்றவற்றை மக்களுக்கு கிடைக்க அரசு அதிகாரிகளுடன் இணைந்து பல்வேறு விதமான முயற்சிகளை எடுத்து வருகிறது. இவற்றிற்கு மிக முக்கியமாக தேவைப்படும் அடிப்படை ஆவணங்களில் ஒன்றான இனச் சான்றானது செப்டம்பர் 9 மற்றும் நவம்பர் 16 ஆகிய நாட்களில் இரண்டு முறை முகாம் வைத்து 250 க்கும் மேற்ப்பட்ட பழங்குடி ஊராளி குழந்தைகள் மற்றும் பெரியோர்களுக்கு வெற்றிகரமாக பெற்றுக் கொடுக்கப்பட்டது.

## பரண் மாலை நேர கல்வி மைய ஆசிரியர்களுக்கான பயிற்சி கூட்டம்

பரண் அறிவாற்றலாக ஆசிரியர்களுக்கான பயிற்சி கூட்டம் ஒவ்வொரு மாதமும் மாதத்தின் இரண்டாம் வாரம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில்; நடைபெறுகின்றது. இப்பயிற்சிக் கூட்டத்தில் 50 மாலை நேரக் கல்வி மைய ஆசிரியர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்சியில் குழந்தைகளுக்கு எவ்வாறு புதுமையான மற்றும் ஆக்கப்பூர்வமான முறையில் மாலை நேர வகுப்புகள் எடுக்கவும், குழந்தைகளின் மற்ற வளர்ச்சியின் மீது அக்கறை காட்டவும் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. மேலும், மாலைநேர அறிவாற்றலக ஆசிரியர்கள் தலைமைத்துவத்தில் வளரவும் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.





## பரண் தோழர்கள் தகுதியாக்கப்பயிற்சிகள்

பரண் பணியாளர்களுக்கான தகுதியாக்கப்பயிற்சிகள் ஒவ்வொரு மாதமும் நடைபெறுகிறது. இவற்றில் பணியாளர்கள் இன்னும் அதிகமாக வளரவும், அதன் மூலம் மக்கள் பயனடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு பல தலைப்புகளின் கீழ் தகுதியாக்கப்பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.



“பண்பாட்டு வேர்கள் நம்மை தாங்க, பழங்குடியின ஓர்மைகள் நம்மை வழிநடத்தும் பரண் மையம், ஒரு இனத்தின் நம்பிக்கையின் ஒளிக்கதிர்.”




பரண் டிரைபல் சொசைட்டி மற்றும் பழங்குடி ஊராளி மக்கள் சங்கம், கடம்பூர்